சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
02.09.2020 புதன்கிழமை



## வழமைக்கு திரும்பின கல்வி நடவடிக்கைகள்

கொழும்பு, செப்.2
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த 5 மாதங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

2

### புதினம் தெரியுமோ?

**விக்னேஸ்வரனின் பேச்சை ஹன்சார்ட்டில் இருந்து நீக்கக் கூடாது என்று அவரது சம்பந்தியும், ராஜபக்ச தரப்பு எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார நேசக் கரம் நீட்டியிருக்கிறார். வெளிப் படையாக பார்த்தால் தனது சம்பந்தியை இக்கட்டில்**

2A


# ஐ.தே.க. தலைமைக்கு கடும் போட்டி

கொழும்பு, செப்.2
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவி கருஜயசூரியவுக்கு வழங்கப்பட்டால் அந்தப் போட்டியிலிருந்து விலகுவதற்கு ரவி கருணாநாயக்க, தயாகமகே, அர்ஜுன ரணதுங்க மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என அறியமுடிகின்றது. பொதுத் தேர்தலில் ஐக்கிய

2

# வாடகை வீட்டிலிருப்பதை மறந்து நடக்காதீர்!

**சிறுபான்மையினருக்கு கூறுகிறார் மேதானந்த தேரர்**



கொழும்பு, செப்.2
**இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்றும், வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிடுவது அப்பட்டமான பொய். அதற்கான வரலாற்று சான்றுகள் எதுவும் இல்லை.**

2

## கண்டியில் நில அதிர்வு!

கொழும்பு, செப்.2
கண்டி திகன உள்ளிட்ட சில பகுதிகளில் மீண்டும் நிலஅதிர்வு உணரப்பட்டது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 29ஆம் திகதியும் இவ்வாறான நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்திருந்தனர். அன்றைய தகவல்களின்படி அன்றிரவு

2

## வெடிகுண்டு வைத்திருந்த ஒருவர் கைது

முல்லைத்தீவு, செப்.2
மிருக வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகள் மற்றும் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட் டில் ஒருவர் புதுக்குடியிருப்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று

2

## வீட்டின் மீது மின்னல் தாக்கம்

சாவகச்சேரி, செப்.2
கச்சாய், புங்கடிப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது மின்னல் தாக்கியதில் வீடு தீப்பற்றியுள்ளது. பெய்த கடும் மழையால் தீ பரவாது அணைந்தது என்று

2

## சஜித் தலைமையில் புதிய கூட்டணி

கொழும்பு, செப்.2
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் 'ஐக்கிய மக்கள் கூட்டணி' எனும் பெயரில் புதிய தொரு அரசியல் கூட்டணி

2

## கொரோனாவில் இருந்து விடுபட பாதயாத்திரை!

யாழ்ப்பாணம், செப்.2
கொரோனா தொற்றில் இருந்து இலங்கை விடுபட வேண்டும் என்று வேண்டி யாழ்ப்பாணத்தில் இருந்து காலிக்குப் பாதயாத்திரை ஒன்று நடத்தப்படுகின்றது. காலி, அக்மீமன பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பாலகுமார என்பவர் இன்று காலை

2

## சிற்றூழியர்கள் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, செப்.2
வவுனியா பொது மருத்துவமனை சிற்றூழியர்களால் இன்று ஆர்ப்பாட்டமும், பணிப் புறக்கணிப்பும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் மருத்துவமனை வாளாகத்தில் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை நடைபெற்றது. தங்களது பணி நடவடிக்கைக

2





## தர்மலிங்கத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.2
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் 35ஆம் ஆண்டு நினைவுதினம் யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் உள்ள அவரது நினைவிடத்தில் இன்று காலை நடைபெற்றது. தர்மலிங்கத்தின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தலைமையில்

## புலிகளுடன் உச்சி மாநாடு நடத்த விரும்பிய மஹிந்த!

### எரிக் சொல்ஹெய்ம் தகவல்



கொழும்பு, செப்.
தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்ற சமாதான பேச்சின் போது அப்போதைய ஜனாதி

2A

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## ஐ.தே.க....

தேசியக்கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.
அதையடுத்து ஐ.தே.கவின் தலைவர் பதவிக் காக அக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் தமது பெயர்களை அந்தப் பதவிக்குப் பரிந்துரைத்துள்ளனர். ரவி கருணாநாயக்க, தயாமகே, நவீன்திஸாநாயக்க, அகில விராஜ் காரியவசம், வஜிர அபேவர்தன ஆகியோரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டன. அதன்பின் னர் அர்ஜுன ரணதுங்க மற்றும் ருவான் விஜே வர்தன ஆகியோரும் தலைமைப்பதவிக்கு போட்டி யிடவிரும்புகின்றோம் என்று அறிவித்தனர்.
ஆனால் தனது உறவினரான ருவான் விஜேவர் தனவுக்கு தலைமைப்பதவியை வழங்கும் வகையிலான காய்நகர்த்தல்களை ரணில் விக்கி ரமசிங்க மேற்கொண்டார். அதற்குக் கட்சிக் குள் எதிர்ப்புகள் கிளம்பின. இந்தநிலையில் கரு ஜயசூரிய தலைமைப்பதவியை ஏற்க தயார் என்ற அறிவிப்பை விடுத்தார். ஆனால் கருவை ஓரங்கட்டும் விதத்திலான அறிவிப்புகளை ரணில் விக்கிரமசிங்க விடுத்தார். எனினும், ரவி, நவீன், தயா கமகே, அர்ஜுன போன்றவர் கள் கருவுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ள னர். இதனால் ஐ.தே.கவுக்குள் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பரபரப் பான சூழ்நிலைக்கு மத்தியில் அக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் சிறி கொத்தவில் கூடவுள்ளது. (எ-44)

## வாடகை...

இவ்வாறு கிழக்கு மாகாண தொல் பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின் கருத்துத் தொடர் பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இனவாதத்தைத் தூண்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி அரசின் அபிவிருத்தித் திட்டங்களை குழப்புவதற்காகவே பூர்வீகம் பற்றி யும், மொழி தொடர்பாகவும் தற் போது பேசுகின்றனர்.
விக்னேஸ்வரனால் கூறப்பட்ட கருத்துகள் அப்பட்டமான பொய்யா கும். அவரின் இத்தகைய உரைகளால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மை யும் கிடைக்கப்போவதில்லை. மாறாகப் பிரச்சினைகளே உருவாகும்.
வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எனவும், பூர்வீக மொழி தமிழ் எனவும் நிரூபிப்பதற்கான எந்தவொரு வர லாற்று சான்றுகளும் இல்லை.
தமிழ்தான் முதலில் இலங்கையில் இருந்தமொழியெனில் அதில் சில பகுதிகளாவது சிங்கள மொழியுடன் பொருந்தியிருக்கும். இங்கு அவ்வாறு இல்லை. அதேபோல் தமிழ் மக்க ளுக்கு இலங்கையில் வாழும் உரிமை இருக்கின்றது. அவர்களும் எமது சகோதரர்களே, இங்கு வாழும் பெரும்பான்மையின மக்கள் அவர்க ளுக்கு அநீதி இழைப்பதில்லை.
வாடகை வீட்டில் இருக்கும்போது, வீட்டு உரிமையாளருக்கு எவரும் குழப்பம் ஏற்படுத்தக்கூடாது என்பது போல இங்கு வாழும் ஏனைய இன மக்களும் பெரும்பான்மையின மக்களுக்கு குழப்பம் விளைவிக்கக்கூடாது.என்றார்.

**புதிய அரசமைப்பு**

இலங்கைக்கு பொருத்தமான விதத்தி லேயே புதிய அரசமைப்பு இயற்றப்ப டவேண்டும். மேற்குலக சட்டதிட் டங்கள் எமக்கு தேவையில்லை- என் றார். (எ-44)

## வழமைக்கு...

தரம் 6 முதல் 13ஆம் தரம் வரையான மாணவர்களுக் கான பாடசாலைகள் இன்று முதல் வழமை போன்று காலை 7.30 மணி முதல் 1.30 மணி வரையில் இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையான மாணவர்களுக்கு செப்ரெம் பர் 8ஆம் திகதி முதல் கற்றல் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பும் என கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது. நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதைய டுத்து, கடந்த மார்ச் மாதம் பாடசாலைகள் அனைத் தும் மூடப்பட்டன.
தற்போது கொரோனா வைரஸின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து, கட்டம் கட்ட மாக பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
எனினும் பாடசாலை நேரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்க மைய தரம் 10மற்றும் 13 வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தினமும் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை முன்னெடுக்கப் பட்டிருந்தது. (எ-இ)

## சஜித் தலைமையில்...



இன்னும் இருவாரங்களில் உதயமாகவுள்ளது.
அதற்கான ஏற்பாடுகள் தற் போது இடம்பெற்றுவருவதாக வும் புதிய சில கட்சிகளும், அமைப்புகளும் கூட்டணியில் இணைத்துக்கொள்ளப்படவுள் ளன எனவும் தெரியவரு கின்றது.
இந்தக் கூட்டணிக்கு தலை மைத்துவ சபையொன்று உருவாக்கப்பட்டு அதன் தலைவராக சஜித் பிரேமதாச வும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் தலைமைத்துவ சபை உறுப்பினர்களாகவும் செயற்படவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. புதிய கூட்டணியைப் பதிவுசெய்யும் நடவடிக்கையும் இடம்பெற வுள்ளது.
சஜித் பிரேமதாச தலைமையி லான ஐக்கிய மக்கள் சக்திய டன் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய உட்பட மேலும் சில கட்சிகள் கூட் டணி வைத்துள்ளன. இவை புதிய கூட்டணிக்கு உத்தி யோக பூர்வமாக உள்வாங்கப்ப டவுள்ளன. (எ-44)

## கண்டியில்...

8.40 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உணர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நடந்து நான்கு நாள்களுக்குப் பின்னர், இன்று காலை மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.
முன்னர் உணரப்பட்ட நிலநடுக்கம் தொடர்பாக கடந்த 30ஆம் திகதி அறிக்கையொன்றை விடுத்திருந்த விசாரணைக்குழு, கண்டி - தலாத்துஓயாவை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட அதிர்வுக்கு 3 சம்பவங்கள் காரணங்க ளாக அமையலாம் என்று தெரிவித்திருந்தது.
கற்குவாரியில் வெடி வைக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிர்வு இதற்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின் றது என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் உதய டி சில்வா தெரிவித்துள்ளார்.
அவ்வாறில்லை எனின் சுண்ணாம்பு கற்பாறை உடைந்து வீழ்ந்திருப்பதற்கான சாத்தியமுள்ளது என்றும் அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் விக்ரோரியா உள்ளிட்ட அதை அண்மித்த நீர்த்தேக்கங்களில் ஏற்பட்ட உயர் நீர் அழுத்தம் மூன்றாவது காரணமாகக் கூறப்பட்டது.
இந்த அதிர்வுகளால் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.
கண்டி - தலாத்துஓயாவை அண்மித்த சில பகுதிகளில் நேற்றிரவு 8.34 மணியளவில் சிறியளவில் அதிர்வொன்று பதிவாகியது. திகன, அளுத்ஹேன, அம்பக்கோட்டே, ஹாரகம மற்றும் குருதெனிய ஆகிய பகுதிகளிலேயே அதிர்வு பதிவாகியுள்ளது.
இதுவொரு நிலநடுக்கம் அல்லவென புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரி வித்தார். நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பின் தமது பணியகத்தின் கீழுள்ள 5 மத்திய நிலையங்களில் அது திவாகியிருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வீட்டின்...

தெரிவிக்கப்பட்டது.
கடந்த 31ஆம் திகதி நள்ளிரவு கடும் காற்று டனும், மின்னலுடனும் மழை பெய்தது.
அப்போதே வீடொன்றின் மீது மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(எ-9)

## சிற்றூழியர்கள்...

ளுக்கு இடையூறு ஏற்படுத் தும் வகையில் கைவிரல் அடையாள நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.
அதைத் தவிர்த்து முன்ன ரைப் போன்று கையொப் பம் இடும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.
எமது கோரிக்கை நிறை வேற்றப்படாவிட்டால் போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித் தனர்.
அரச சட்டங்கள் அனைவ ருக்கும் சமன், எமக்கு மட்டும் ஏன் இந்த அநீதி,மன அமைதியுடன் பணிசெய்ய விடு போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-110)

## வெடிகுண்டு...

பொலிஸார் தெரிவித்தனர். இருட்டுமடு கிராமத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.
புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகா ரிக்குக் கிடைத்த தகவலுக் குமைய ஐ.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழு இந்தக் கைது நடவ டிக்கையை முன்னெ டுத்தது.
பன்றி வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் 7 வெடிகுண்டுகளும், 20 லீற்றர் கசிப்பும் கைப்பற் றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரிடம் விசார ணைகள் மேற்கொள்ளப்ப டுகின்றன என்றும், விசார ணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்ப டுத்தப்படுவார் என்றும் புதுக்குடியிருப்புப் பொலி ஸார் தெரிவித்தனர்.(எ-19)



## தர்மலிங்கத்தின்...

நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன.
தர்மலிங்கத்தின் நினைவிடத்தில் மலர் மாலை அணி வித்து,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணை வேந்தர் சிறி பற்குணராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம், உள்ளூராட்சி சபை உறுப்பி னர்கள், கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-20)

## கொரோனாவில்...

யாழ்ப்பாணத்தில் இருந்து காலிக்கு பாதயாத்திரையை ஆரம்பித்தார்.
கடந்த 8ஆம் திகதி காலியில் இருந்து பாதயாத்தி ரையை ஆரம்பித்த அவர் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். இன்று அவர் காலியை நோக்கிப் பாதயாத்திரையை ஆரம்பித்தார்.
யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி மீகா ஐந்துரஸ்ரீ விமலரத்ன தேரரைச் சந்தித்து ஆசீர்வாதங்க ளைப் பெற்றுக் கொண்ட அவர் தனது பாதயாத்தி ரையை ஆரம்பித்தார். 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டெலிட் ரத்னா யக்க இலங்கைக் கொடியை வழங்கி பாதயாத்திரையை ஆரம்பித்து வைத்தார். (எ-25)

# புலிகளுடன்...

பதியும், இப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ச, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் உச்சி மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு கோரினார் என்று நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளரா கச் செயற்பட்ட எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஒரே இலங்கைக்குள் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதிக்கம் வழங்க மஹிந்த ராஜபக்ச தயாராக இருந்தார். முற்றிலும் திறந்தநிலை உச்சி மாநாடு ஒன்றை நடத்தி ஒரே இலங்கைக்குள் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதிக்கத் துக்கு இணங்க முடியும் என்று மஹிந்த ராஜபக்ச எம்மிடம் தெரிவித்திருந்தார்.

இறுதிப்போரின்போது வடக்கில் உள்ள பொதுமக்களை கப்பல்களைப் பயன்ப டுத்தி வெளியேற்றுவதற்கு நோர்வே தயாராக இருந்தது. ஒவ்வொரு பொதுமக னும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பதிவுசெய்யப்பட வேண்டும் என்றும், பொதுமக்களை தென்னிலங்கைக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ அழைத்துச் செல்லவும் எதிர்பார்க்கப்பட் டது. எனினும் பிரபாகரன் அதற்கு இணங் கவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங் கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு அந்த நாடு ஆதரவாகவே இருந்தது. எனி னும் 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் இந்தியாவின் கொள்கை யில் மாற்றம் ஏற்பட்டது. இலங்கையின் பிரச்சி னையை இராணுவ நடவடிக்கையின் மூலம் தீர்க்கமுடியும் என்று இந்தியா எண்ணியது. என்றார். (எ-இ)



# சுகாதார உதவியாளர்கள் மன்னாரில் போராட்டம்

மன்னார், செப். 3

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமை யாற்றும் சுகாதார உதவியாளர்கள் நேற்று அடையாளப் பணிப் புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அரசாங்கத்தின் தாபன விதிக் கோவையை ஒழுங்கான முறையில் அனைத்துச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் சமனான முறையில் பின்பற்றப்பட வேண்டும் எனவும், சுகாதார உதவியாளர்களை ஒருதலைப் பட்சமாக நடத்து வதை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் நிறுத்த வேண்டும் எனவும் கோரியே அவர்கள் இந்தப் போராட் டத்தை முன்னெடுத்தனர். காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாண சுகாதார திணைக்களத்தால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் சுகாதார உதவியாளர்கள் மாத்திரம் உள்வரவு மற்றும் வெளியேறும் போது விரல் அடையாளங்கள் பதிவு செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு செய்யா விட்டால் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அவர்கள் நேற்று போராட்டத்தை முன் னெடுத்திருந்தனர். வடமாகாண சுகாதாரப் பணியாளர்க ளுக்கு நீதியான முடிவைப் பெற்று தராத பட்சத்தில் தாய்ச் சங்கத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் பணிப்புறக்க ணிப்பில் ஈடுபடவுள்ளோம் என போராட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக உரிய முறையில் பேசி தொடர்சியாக போராட்டம் இடம் பெறாத வகையில் நடவடிக்கை மேற்கொண்டு தருவதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார். (ஐ56)



## புதினம் தெரியுமோ?

இருந்து காப்பாற்ற வாசுதேவ களத்தில் இறங்கி விட்டதாகவே தோன்றும்.

ஆனால் உண்மை அதுவல்ல,

முன்னாள் இடதுசாரியான வாசுதேவ, அந்தக் காலங்களில் இனப் பிரச்சினை விவகாரத்தில் நடுநிலையான ஒருவராக இருந்தார்.

ஆனால் எப்போது ராஜபக்சக்களின் காலடியில் வீழ்ந்தாரோ அதற்குப் பின்னர் அவரது பேச்சும், போக்கும் அடியோடு மாறிவிட்டன. ஒரு சராசரி சிங்கள இனவாதியாகவே மாறிவிட்டார்.

இப்போதும் விக்னேஸ்வரன் மீது ஐக்கிய மக்கள் சக்தியின் மனு நாணயக்கார பூசத்தொடங்கிய இனவாதச் சாயத்தை எல்லாப் பேரினவாதிகளும் கெட்டியாகப் பிடித்து பாயத் தொடங்கி உள்ளனர்.

ஒரு பக்கத்தில் சிங்கள இனவாதிகள் விக்னேஸ்வரனை தூற்ற தூற்ற அதற்கு ஏற்றாற்போல அவரின் செல்வாக்கு தமிழர்களிடம் உயரத்தொடங்கியுள்ளது.

அதனை எப்படியாவது இல்லாமல் செய்யவே வாசுதேவ நாணயக்காரவை இறக்கி விட்டுள்ளனர் ராஜபக்சக்கள்.

வாசுதேவ திடீர் ஆதரவு கொடுப்பதால் தமிழர்களிடம் மீண்டும் சிங்களச் சம்பந்தியோடு விக்னேஸ்வரன் இணைந்தே இப்படி நாடகமாடுவதாக ஒரு எண்ணத்தை உருவாக்குவதே அவர்களின் நோக்கமென்று தகவலறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

விக்கியரும் இதைப் புரிந்து கொண்டால் சரி.

-பட்சி

# விளையாட்டில் மோதல்; இரு வீரர்கள் காயம்

வவுனியா,செப்.3

கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்த னர்.

இந்தச் சம்பவம் வவு னியா செட்டிக்குளம் காந்திநகர் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

குறித்த மைதானத்தில் இரு கழகங்களுக்கி டையே மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இடம்பெற்றது. இதனிடையே இரு கழக அணியினருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் சிகிச் சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டனர். (ஐ-18)





# தெரிவான பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதம் வழங்கல்

வவுனியா, செப்.3

வவுனியாவில் தெரிவுசெய்யப்பட்ட 383 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று வவுனியா மாவட் டச் செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட் டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட் டுள்ள 50,000 பட்டதாரிகளுக்கான நியமன கடிதம் வழங்கும் செயற் றிட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்டத் தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 383 பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட் டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துல சேன தலைமையில் நடைபெற்றது.

இதில் வவுனியா வடக்கில் 32 பேரும், , வவுனியா தெற்கில் 20 பேரும், வெங்கள செட்டிக்குளம் பிரிவில் 28 பேரும், வவுனியா நகரில் 303 பேருமாக மொத்தமாக 383 பட்டதாரிகள் தெரிவாகினர்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட மேல திக மாவட்டச்செயலர் தி. தினேஷ் குமார் , வன்னி பிராந்திய கட்ட ளைத் தளபதிகள் , வவுனியா நான்கு பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக உயர் அதிகாரி கள் , அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ஐ-18,110)



தருமபுரம் நெத்தலியாற்று சித்தி விநா யகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப் பாக நடைபெற்றது. (ஐ-113)

# அதிகளவிலானோர் காணாமல் ஆக்கப்பட்ட நாடாக இலங்கை

கொழும்பு, செப். 2
உலகிலேயே அதிகளவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருப்பதுடன், 1980ஆம் ஆண்டுகளிலிருந்து நாட்டில் நடைபெற்ற இனமோதல்களில் சுமார் 60 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் பேர் வரையில் காணாமல்போயிருக்கிறார்கள் என்று இலங்கையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கிறது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கான தமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இலங்கையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

அதில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதற்காக தொடர்ச்சியாகப் போராடிவரும் அவர்களது குடும்பத்தினருடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்.

2009ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போரின் போது பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் போர் வலயத்திலிருந்து வெளியேறி, அரச படைகளிடம் சரணடைந்தனர். அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதாக படையினரால் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக அவர்கள் சரணடைந்தனர். எனினும் தற்போது வரையில் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விவரங்கள் வெளியாகவில்லை. காணாமல்போனோரின் குடும்பத்தினர் இவ்விவகாரம் தொடர்பிலும் போர்க்குற்றங்கள் குறித்தும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர், என்றுள்ளது. (ஒ,5)



## ஆணைக்குழுவில் முன்னிலையானார் அஜித் ரோஹண

கொழும்பு, செப். 2
பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானார்.

பதவி விலக்கப்பட்டுள்ள மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க செய்த முறைப்பாட்டில், பிரதிவாதியாக உதவி பொலிஸ் அதிகாரி கிங்ஸ்லி குணசேகரவும் சாட்சியாளராக அஜித் ரோஹணவும் பெயரிடப்பட்டுள்ளதால், அவர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினார். (ஒ,வ,இ)

## சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாமல் செய்ய அரசு முயற்சி

### ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 2
அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் நிறுவப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் சிங்களவரல்லாத இரண்டு பிரதிநிதிகளை வெளியேற்றும் நோக்கத்துடன் அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களையும் இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

47 உறுப்பினர்களைக் கொண்ட பத்து சுயாதீன ஆணைக்குழுக்களிலும் இரண்டு உறுப்பினர்களை மாத்திரமே அரசாங்கம் குறிவைக்கிறது என தேசிய தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தொடர்ந்து இரண்டு அதிகாரிகள் தொடர்பில் கேள்வி எழுப்பி வருகிறார்.

அவர்கள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவர்களை நீக்குவதற்கான அதிகாரம் அரசாங்கத்துக்கு காணப்படுகிறது. சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் சுயாதீனமானவர்கள்.

அவர்கள் விரும்பியபடி செயற்பட முடியும். குறித்த இரண்டு பிரதிநிதிகளுக்காக அனைத்து ஆணைக்குழுக்களையும் ஒழிக்க வேண்டுமா? - என்றார். (ப-இ)



## கால் போத்தல் மது தடை: இவ் வாரம் இறுதி முடிவு

கொழும்பு, செப்.2
கால் போத்தல் மதுபானத்தைத் தடை செய்வது தொடர்பில் உற்பத்தியாளர்களுடன் சந்தித்த பின்னர் இந்த வாரம் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பயன்படுத்தப்பட்டபின் மதுப்போத்தல்களை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான பொறுப்பை உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கும் சந்தர்ப்பத்தில் கால் போத்தல் மதுபானத்தின் பயன்பாடு தடை செய்யப்படும். இதேவேளை சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கையாக மதுபான பக் கெட்டுக்களை தடை செய்வதற்கான முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. என்று தெரிவித்துள்ளார். (ந-இ)

## உதவி ஆசிரியர் 420 பேருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி



கொழும்பு, செப். 2
பயற்சிகளை நிறைவு செய்துள்ள 420 உதவி ஆசிரியர்களின் நியமனம் தொடர்பில் ஓரிரு வாரங்களில் நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச் செயலாளரும், தோட்ட, வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கிடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் எட்டப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். (ப







## அல்டயர் குடியிருப்பை பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, செப்.2
கொழும்பில் சுமார் 2 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அல்டயர் குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பேர வாவியுடன் இணைந்ததாக இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வணிகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தின் நிலமாடி 40,000 சதுர அடிகளைக் கொண்டதோடு, 404 அதி சொகுசு வீடுகளையும் உயர்தரமான கடைத் தொகுதிகளையும் கொண்டுள்ளது. இரண்டு கோபுரங்களைக் கொண்ட அல்டயர் கட்டடத் தொகுதியின் ஒரு கோபுரத்தில் 68 மாடிகளும் அடுத்த கோபுரத்தில் 63 மாடிகளும் உள்ளன. முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளதோடு, நகர அபிவிருத்தி அதிகார சபை இதற்கான நிர்மாணப் பணிகளைக் கண்காணித்து வருகின்றது. இக் கட்டடத் தொகுதியின் சுமார் 98 வீதமான நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில், எஞ்சியுள்ள பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் அளவில் நிறை வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ப-இ)



# 40 அடி பள்ளத்தில் வீழ்ந்தது கார்

### விரிவுரையாளர்கள் படுகாயம்

பதுளை,செப்.2

பதுளை மகியங்கனை சொரண தொட்ட பகுதியில் இன்று அதிகாலை 2.50 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் விரிவுரையாளர்கள் ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விரிவுரையாளர்கள் பயணித்த கார் வீதியை விட்டு விலகி 40 அடி பள்ளத்தில் வீழ்ந்ததால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் பெண் விரிவுரையாளர்கள் நால்வரும் ஆண் விரிவுரையாளர் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-இ)

# கல்வித் தரத்தை மேம்படுத்த சிறந்த பொறிமுறை

### தமிழ் மக்கள் பேரவை நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 2

கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு 10 விடயங்களை அடையாளம் கண்டு அவற்றை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்கள் பேரவை நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த விடயத்தில் ஆர்வமுள்ள தரப்புக்களைத் தொடர்பு கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிரியர்களின் பெருமுயற்சியுடனும் பெற்றோர்களின் உழைப்பு, ஊக்குவிப்புகளுடனும் மாணவர்களின் அயராத முயற்சிகளினூடும் எம்மவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் பயனாக உருவாகிவரும் எமது இளம் தலைமுறையினரின் திறனையும் ஆளுமையையும் தமது குடும்பம், மொழி, கலை, கலாசாரம் மற்றும் நற்பண்புகள் என்பவற்றில் அவர்களுக்கு இருக்கும் பற்றுறுதியை மேம்படுத்துவதற்கு செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக பலருடன் கலந்துரையாடல்களை தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்டு வருகின்றது. இதன் பயனாகச் செயற்படுத்தப்பட வேண்டிய பத்து விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

- மாணவர்களின் உண்மையான ஆர்வமும் திறனும் அடையாளப்படுத்தப்படல் தொடர்பாக பயிற்சியளித்தல்.
- மாணவர்களினுடைய கற்றல் சம்பந்தமான தெரிவுகளுக்கு முன்னுரிமை வழங்குவதும் கற்பித்தல் சம்பந்தமாக அவர்களின் அபிப்பிராயங்கள் உள்வாங்கப்படுவதற்கான பொறிமுறைகளை மேம்படுத்துவதற்கும் பயிற்சியளித்தல்.
- நல்ல பழக்கங்களையும் செயல்களையும் மாணவர்கள் பழகுவதற்கும் செய்வதற்கும் ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை பொறிமுறைகளுடன் நடைமுறைப்படுத்தல்.
- மாணவர்களுக்குக் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வமூட்டும் நடைமுறைகளை அறிமுகம் செய்தலும் தன்னார்வ கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்தலும்.
- குடும்பம், ஆசிரியர்கள், மொழி, கலை, கலாசாரம், தன்னிறைவு என்பவற்றில் மாணவர்களுக்கு இருக்கும் மதிப்பையும் பற்றுறுதியையும் மேம்படுத்துவதற்கான திட்டங்களை அறிமுகம் செய்தல்.
- சவால்களை எதிர்கொள்ளும் திறனையும், வெற்றி நோக்கி முயற்சிக்கும் மனப்பாங்கையும், தோல்விகளை தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவத்தையும் வளர்க்க முயற்சி எடுத்தல்.
- நட்புறவு, சகோதரத்துவம், நம்பிக்கை உணர்வுகளை வளர்த்து பிறரின் மனம் நோகாத சிநேகபூர்வ தொடர்பாடல்களுக்கான பயிற்சி வழங்குதல்.
- நேரத்தையும் வாழ்க்கையையும் திட்டமிடுவதற்கான பயிற்சியளித்தல்.
- நல்ல அடிப்படை குணாதிசயங்களை கற்கும், கற்பிக்கும் உபாயங்களை அறிமுகப்படுத்தல்.
- மற்றவர்களின் உரிமைகளையும் மன உணர்வுகளையும் புரிந்துகொள்ள பயிற்சியளித்தல்.

இவ்வாறாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் பல விடயங்களையும் நடைமுறைப்படுத்தி முன்னெடுக்கப் பல்வேறு தரப்பினருடனும் இணைந்து பணியாற்றும் முயற்சிகளை தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்திருக்கிறது. இதற்கான தொடர் திட்டமிடல் செயலமர்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் அமைப்புகள், கல்வியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் tpcofficialmail@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாக தமிழ் மக்கள் பேரவையைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம், என்றுள்ளது. (ஒ,5)





# பாடசாலைக் கட்டடத்தை சீர்செய்க!

### பெற்றோர் விசனம்

ஹற்றன், செப்.2

பாதுகாப்பற்ற நிலையிலுள்ள பாடசாலைக்கு எக் காரணம் கொண்டும் பிள்ளைகளைக் கல்வி கற்பதற்கு அனுப்ப முடியாது எனத் தெரிவித்து ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் பெற்றோர் ஒன்று திரண்டு குரல் எழுப்பியிருந்தனர். சுமார் 75 வருடங்கள் பழமை வாய்ந்த அந்தப் பாடசாலையின் மேல் மண்டபமொன்று ஆபத்தான நிலையில் உள்ளமையை பெற்றோர் சுட்டிக்காட்டினர். நல்லாட்சி அரசாங்கத்தில் கல்வி இராஜாங்க அமைச்சராக இருந்த வே.ராதாகிருஷ்ணன், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய அமைத்துக்கொடுத்த புதிய கட்டடத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டும் திறக்கப்படாமலேயே இருப்பது குறித்தும் பெற்றோர்கள் கேள்வி எழுப்பினர்.

மேற்படி சேதமுற்றதாகக் கூறப்படும் வகுப்பறை மாணவர்களுக்காகவே புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமையைப் பெற்றோர்கள் சுட்டிக்காட்டினர். புதிய கட்டடம் திறக்கும் வரை தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பப்போவதில்லை என்றும் அவர்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர். (வ)

# பஸ் –மோ. சைக்கிள் விபத்து: இளைஞர்கள் இருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, செப்.2

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் நேற்று இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அக்கரைப்பற்று பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு பஸ் ஒன்று தாழங்குடா பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் மீது மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்கள் தாழங்குடா பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் என காத்தான்குடி பொலிஸார் தெரி விக்கின்ற னர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி மக்களினால் குறித்த பஸ் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது, இதனால் பேருந்து கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. சாரதி மற்றும் உதவியாளர் இருவரும் தப்பிச் சென்றுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)

# குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

கொழும்பு, செப்.2

திஸ்ஸமஹாராம தெபரவெள தேசிய பாடசாலையில் கடற்படையி னரால் நிறுவப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நீர்ப்பாசன அமைச்ச ரும் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகா மைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக் ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. அண்மையில் அந்தப் பாட சாலைக்கு ஜனாதிபதி மேற்கொண்ட விஜயத்தின் போது விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கு அமைய இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)





## ஹெரோய்னுடன் பெண் கைது

கண்டி, செப்.2

கண்டி மருத்துவமனை வீதியில் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணிடமிருந்து 51 கிராம் ஹெரோய்ன் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பெண் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் 9 வருடங்கள் சிறையில் இருந்து விடுதலையானவர் எனவும், சிறையில் இருந்த காலப் பகுதியில் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பை பேணியதன் மூலம் தற்போது ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனவும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)

## தொல்பொருள்களுடன் நபரொருவர் கைது

கம்பஹா, செப்.2

கம்பஹா மினுவங்கொடை பகுதியில் சட்டவிரோத புதையல் அகழ்வு நடவடிக்கைகளின் மூலமாக பெற்றுக் கொண்டவை என சந்தேகிக்கப்படும் தொல்பொருள்களுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறிய மாணிக்கக்கற்கள், இரண்டு புத்தர் சிலைகள் செம்பு மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட சிலைகள் போன்றன சந்தேகநபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-இ)

## விசேட சோதனை; 433 பேர் கைது

கொழும்பு, செப்.2

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் போதைப்பொருள் மற்றும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 433 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 440 கிராம் ஹெரோய்ன், ஒரு கிலோ கஞ்சா உள்ளிட்ட மேலும் பல போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகநபரொருவரும் நுகேகொடை குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-இ)

# பொறுப்புடன் செயலாற்றுவோம்

## நாட்டு மக்களிடம் கரு வேண்டுகோள்



கொழும்பு, செப்.2

நாட்டு மக்கள் தத்தமது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் ஊடாக, நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் அனைவரும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை 3000 தை எட்டியுள்ள நிலையில், உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, அதனைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை நாம் சிறப்பாகக் கையாண்டிருக்கின்றோம்.தற்போது நாட்டில் அனைவரும் வழமை போன்று தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், பொறுப்பு வாய்ந்த பிரஜைகள் என்ற வகையில் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் பாதுகாப்பாக இருந்தால் ஒட்டுமொத்த நாடும் பாதுகாப்பாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தனது மற்றொரு பதிவில் இலங்கை மிகவும் அழகான நாடு என்று குறிப்பிட்டிருக்கும் அவர், நாட்டில் சுற்றுச்சூழல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது, அவை சூழலின் பாதுகாப்பை முன் நிறுத்தியதாக அமைய வேண்டும். சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான திட்டங்கள் தொடர்பில் வெளியிடப்படும் அறிக்கைகளால் மக்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். (ந-இ)

## வாகன விபத்தில் மூவர் சாவு

கொழும்பு, செப்.2

மட்டக்குளி பிரதேசத்தில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். லொறியொன்றும் ஓட்டோக்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்தில் பெண்ணொருவரும் இரண்டு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர். (வ-இ)

## பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிப்பு



கொழும்பு, செப்.2

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெரிய வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், தற்போது பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் விலை 105 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த நாட்களில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ ஒன்று 50 முதல் 55 வரையில் காணப்பட்டது.

மாத்தளை, தம்புள்ளை, சிகிரிய மற்றும் நாஉல ஆகிய பகுதிகளிலிருந்தும் பெரிய வெங்காயங்கள் சந்தையில் விற்பனைக்கு வருவதன் காரணமாக பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (நஜ)

## தந்தை மீது இளைஞன் தாக்கு

மட்டக்களப்பு, செப்.2

வாழைச்சேனை- பிறைந்துரைச்சேனை பகுதியில் போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவர் தந்தை மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி விஜயவீர தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

போதைக்கு அடிமையான 22 வயதுடைய இளைஞன் தனக்கு போதைப்பொருள் வாங்க பணம் தருமாறு தந்தையிடம் கோரிய நிலையில், தந்தை மறுப்புத் தெரிவிக்கவே அவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். தாக்குதலுக்குள்ளான தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில் போதைத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜே.எம்.துசிதகுமார தலைமையில் பொலிஸாரால் இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து சிறிய போதைப்பொருள் பக்கெட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-150)

## மோதலில் இளைஞர் சாவு

மாத்தறை, செப்.2

தனிநபர்களுக்கிடையிலான மோதலில் இளைஞர் ஒருவர் மாத்தறை பஸ்கொட பிரதேசத்தில் நேற்று கொலை செய்யப்பட்டுள்ளார்.

மூவருக்கிடையில் தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியமையே இந்த கொலைக்கு காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மோதலில் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## கொக்கலையில் 6 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, செப்.2

கொக்கலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஆறு பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கராப்பிட்டிய வைத்தியசாலையில் நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது, இவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பட்டபொல, எல்பிட்டிய, கடவத்தை, வலஸ்முல்ல, முல்லேரியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் கொக்கலை சுற்றுலா விடுதி ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இன்று கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்படவுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (வ)



## மின்னல் தாக்கம்: 27 பசுக்கள் இறப்பு

மட்டக்களப்பு, செப்.2

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட மாவடியோடைப் பகுதியில் இடம்பெற்ற திடீர் மின்னல் தாக்கத்தினால் பண்ணையாளர் ஒருவரின் 27 பசுக்கள் இறந்துள்ளன.

இடியுடன் கூடிய மழை பெய்தபோது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினாலேயே இந்தப் பசுக்கள் இறந்துள்ளன. இதனால் சுமார் 20 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது, இவற்றால் கிடைத்த வருமானத்தைக் கொண்டே எமது பிள்ளைகளின் கல்வியை முன்கொண்டு சென்றோம். தற்போது இந்த இழப்பினால் ஒட்டுமொத்த வருமானத்தையும் இழந்து நிற்கின்றோம். பாதிக்கப்பட்டுள்ள எமக்கு அரசாங்கம் ஊக்குவிப்பை வழங்குமானால் எம்மால் இந்தத் தொழிலை தொடர்ந்து செய்யக்கூடியதாக இருக்கும். என பண்ணை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இறந்த பசுக்களை பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி கடற்படையினர் புதைத்தனர். (ந-150)

# இலங்கைக்கு சிவப்பு எச்சரிக்கை!

தொடர் அடைமழைக்கு சாத்தியம்

கொழும்பு. செப்.2

நாட்டின் காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல்நிலை காரணமாக எதிர்வரும் 18 மணித்தியாலங்கள் அடைமழை பெய்யும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

சில மாவட்டங்களில் 200 மில்லி மீற்றருக்கும் அதிகமாக அடைமழை பெய்யலாம். இடியுடன் கூடிய மழை பெய்யும்போது 70 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்

ஊவா, கிழக்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில பகுதிகளில் 200 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், குருணாகல், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, கேகாலை, கண்டி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் மழை மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும்.

இதேவேளை காலி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டார் பிள்ளையான்

கொழும்பு, செப்.2

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நாளைய தினம் சாட்சியளிப்பதற்காக அவர் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் தடுப்பு காவலில் இருக்கும் பிள்ளையானுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)



## காலியிலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவு

காலி, செப்.2

காலி மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 295 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என காலி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக காலி பந்தேகம வீதியின், தங்கெதர, பெலிகஹா, கஹதுவவத்த, பெட்டிகலவத்த, மிலிந்துவ ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளதால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)







ஆவணிப் பூரணை தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம், நல்லையம்பதி அருள்மிகு சிங்காரவேலன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் விளக்கு பூஜை இடம்பெற்றது.

படங்கள் : ஐ. சிவசாந்தன்

## அபுதாபி விபத்தில் இலங்கையர் சாவு

கொழும்பு, செப்.2

மத்திய கிழக்கு நாடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளார். அபுதாபி நகரத்தில் திடீரென எரிவாயு தொட்டி வெடித்தமை யினால் விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் மாத்தறையை சேர்ந்த 28 வயதான இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது. (வ-இ)

## சடலம் மீட்பு

அம்பாறை, செப்.2

உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று அம்பாறை அக்கரைப்பற்று மொட்டையாமலையின் மேல் இன்று மீட்கப்பட்டுள்ளது என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தைக் கண்ட விவசாயிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலம் அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (வ-இ)





## 7 நாள்கள் துக்கதினம்

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மறைவை யொட்டி, 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு நேற்று அறிவித்துள்ளது. இதன்படி அனைத்துஅரசு நிகழ்ச்சி களும் ரத்து செய்யப்பட் டுள்ளன. (வ)

## பிரணாப் முகர்ஜியின் உடல்
# அரச மரியாதையுடன் தகனம்

புதுடில்லி, செப்.2

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் உடல் அரச மரியாதை யுடன் தகனம் செய்யப்பட்டது. நீண்ட நாட்களாக கோமா நிலையி லிருந்த பிரணாப் முகர்ஜி சிகிச்சை பலனின்றி டெல்லி ராணுவ மருத்து வமனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இதையடுத்து, டெல்லி ராஜாஜி மார்க்கில் உள்ள அவரது இல்லத்தில், அவரது உருவப் படத்திற்கு மலர் வளையம் வைத்து தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் மோடி உள்ளிட்டோர் நேரில் அஞ்சலி செலுத்தினர். கொரோனா வழிகாட்டுதல் நடைமு றையில் உடல் தகனம் செய்யப்பட வேண்டும் என்பதால், அவரது உடல் ராணுவ வாகனத்திற்கு பதி லாக வானில் எடுத்துச் செல்லப்பட் டது. முகர்ஜிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்த நிலையில் கொரோனா சுகாதார நெறிமுறை ளின்படி, டெல்லியில் லோதி மின் மயானத்தில் ராணுவ மரியாதையு டன் அவரது உடல் தகனம் செய்யப் பட்டது. (வ)

## பணி நீக்கம்



ரியாத், செப்.2

சவூதி அரேபிய அரச குடும்பத்தின் இரு உறுப்பினர்கள் பணிநீக்கம் செய்யப்பட் டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற சந்தே கத்திற்கு இடமான நிதி பரிவர்த்தனையில் இருவருக்கும் தொடர்புள்ளது எனக் கூறியே இவர்கள் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. சவூதி தலைமையிலான யெமன் கூட்ட ணியின் கூட்டுப்படைகளின் தளபதியாக உள்ள இளவரசர் பஹத் பின் துர்கி மற்றும் அவரது மகனான பிரதி ஆளுநர் அப்துல் அஸிஸ் பின் பாஹத் பதவி நீக்கப்பட் டுள்ளனர். சவுதி மன்னரின் மகனும் முடிக் குரிய இளவரசருமான முஹமது பின் சல்மான் அரசில் ஊழல் விவகாரத்தில் தீவிர நடவ டிக்கைகளை எடுத்து வருகிறார். எனினும் முடிக்குரிய இளவரசர் அதிகாரத்தில் இருப்பதற்கான முட்டுக்கட்டைகளை அகற்றும் நடவடிக்கையாகவே உயர் அதிகாரிகள் மீதான செயற்பாடுகள் காணப்படுகின்றன என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. (வ-இ)



## இஸ்ரேல் – ஹமாஸ்க்கிடையில் தற்காலிக யுத்த நிறுத்தம்

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப் புக்கிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டுள்ளது. இதனையடுத்துக் காசா பகுதியில் மோதல் நடவடிக்கை கள் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. பலஸ்தீனத்தின் காசா முனை பகுதி, ஹமாஸ் அமைப்பின் தன்னாட்சி பகுதியாக காணப்ப டுகிறது. இஸ்ரேலுக்கும் பலஸ்தீ னத்துக்கும் இடையில் நீண்ட கால மாக மோதல்கள் இடம்பெ றுகின்றன. இந்நிலையில் கட்டார் நாட்டின் ஆதரவுடன், இரு தரப்பினருக்குமிடையில் பல் வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, அவற்றுக் குக் கிடைக்கப்பெற்ற அனும திக்கமையவே யுத்தம் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோரிக்கைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் தாக்கு தல்கள் இடம்பெறலாம் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (வ)

## இந்தியாவிலிருந்து லண்டனுக்கு
# பஸ்

உலகின் மிக நீண்ட பஸ் பயணமாக இந்தியாவின் டில்லியிலிருந்து லண்டனுக்கான பஸ் சேவை எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பமாகவுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. குருகிராம் நகரைச் சேர்ந்த ஒரு தனியார் சுற்றுலா நிறுவனம் டில்லியிலிருந்து லண்டனுக்கு பஸ் சேவையை அறிவித்துள்ளது. இந்தப் பயணம் 18 நாடுகள் வழியாக 12,000 மைல்கள் தூரத்தை 70 நாள்களில் கடந்து செல்லும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தப் பயணத்துக்காக 20 வகுப்பு இருக்கைகள் கொண்ட சிறப்பு பஸ், வணிக வகுப்பு இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. பயணிக்கும் 20 பயணிகளைத் தவிர, ஒரு சாரதி, உதவி சாரதி, ஒரு வழிகாட்டி மற்றும் ஒரு உதவியாளர் இருப்பார்கள். பயணத்தின் போது வழிகாட்டி மட்டும் அவ்வப்போது இடைவெளியில் மாற்றப்படு வார். பயணிகளின் விசா ஏற்பாடுகளையும் பஸ் நிறுவனம் ஏற்பாடு செய்து கொடுக்கும்.

பயணத்துக்கான கட்டணம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பயணிகள் தங்கள் விருப்பத்துக்கு வசதிக்கும் ஏற்ப வெவ்வேறு இடங்களைத் தேர்வு செய்யலாம், அதே நேரத்தில் குறிப்பிட்ட தொகுப்பின் படி அவர்கள் செலுத்த வேண்டி யிருக்கும். இருப்பினும், டில்லியில் இருந்து லண்டனுக்கான முழு பயணத்தையும் அவர்கள் பயன்படுத்தினால் ஒரு நபருக்கு சுமார் 20,000 அமெரிக்க டொலர் செலவாகும் என்றும் மதிப்பி டப்பட்டுள்ளது.



# இறுதிவரை 'திக்.. திக்' பாக். அணி அசத்தல்!




## மூன்றாவது ரி20யில் வென்று தொடரை சமப்படுத்தியது

லண்டன், செப்.2

இங்கிலாந்து பாகிஸ்தான் இடையே நடைபெற்ற மூன்றாவது ரி20 ஆட்டம் கடைசிப் பந்துப் பரிமாற்றம், கடைசி பந்து வரை பரபரப்பாக சென்றது. இங்கிலாந்து அணி போராடி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தில் இரண்டாம் ரி20 போலவே சிறப்பாகச் செயற்பட்டது. பந்துவீச்சில் சரியான நேரத்தில் இலக்குகளைச் சரித்தமையால் இங்கிலாந்து அணியை பாகிஸ்தான் அணி வீழ்த்தியது.

**ரி20 தொடர்**

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரில் ஆடின. முதல் ஆட்டம் மழையால் தடைபட்ட நிலையில், இரண்டாம் ரி20 ஆட்டத்தில் இங்கி லாந்து அணி அபார ஆட்டம் ஆடி 196 என்ற இலக்கைத் துரத்திப் பிடித்தது.

**மூன்றாவது ரி20**

மூன்றாவது ரி20 ஆட்டத்தில் இங்கிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. பாகிஸ்தான் அணிக்கு பாக்கர் ஜமான் (ஓர் ஓட்டம்), பாபர் அசாம் (21 ஓட்டங்கள்) சுமாரான ஆரம்பம் அளித்தனர். அடுத்து இணைந்த ஹைதர் அலி முகமது ஹபீஸ் அதிரடி ஆட்டம் ஆடினர்.

**ஹைதர் அலி அரைசதம்**

ஹைதர் அலி 33 பந்துகளில் 54 ஓட்டங்கள் குவித்தார். அவர் 5 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் விளாசினார். அவர் ஆட்டமிழந்த பின் ஷதாப் கான் (15 ஓட்டங்கள்), இமாத் வாசிம் (ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்கள்) ஆகியோருடன் சேர்ந்து ஹபீஸ் அதிரடி ரன் குவிப்பில் ஈடுபட்டார். ஹபீஸ் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 52 பந்துகளில் 86 ஓட்டங்கள் குவித்தார். 4 நான்கு ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்கள் என இரண்டாவது ஆட்டம் போலவே இந்த ஆட்டத்திலும் அதிரடியாக ஆடி அரைசதம் கடந்து அசத்தினார்.

பாகிஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 190 ஓட்டங்களை எடுத்தது.

**இங்கிலாந்து பந்துவீச்சு**

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் மொயீன் அலி, டாம் கர்ரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும், ஜோர்டான் இரு இலக்குகளையும் வீழ்த்தினர். ரஷித் 3 பந்துப் பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களும், கிரிகோரி 4 பந்துப்பரிமாற்றங்களில் 41 ஓட்டங்களும் கொடுத்துச் சொதப்பி இருந்தனர்.

**இங்கிலாந்து வெல்லும் என்ற எதிர்பார்ப்பு**

191 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கை நோக்கி இங்கிலாந்து அணி துரத்தத் தொடங்கியபோது இரண்டாவது ஆட்டம் போலவே எளிதாக அந்த அணி வெல்லும் என்றே அனைவரும் கணித்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பேர்ஸ்டோ ஓட்டமெதுவும் பெறாது வெளியேறி ஏமாற்றினார்.

**இலக்குகள் வீழ்ச்சி**

அவரைத் தொடர்ந்து மலன் (7 ஓட்டங்கள்), இயான் மார்கன் (10 ஓட்டங்கள்) அடுத்தடுத்து வெளியேறினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டாம் பான்டன் 31 பந்துகளில் 46 ஓட்டங்கள் குவித்தார். இதுவரை சோபிக்காத மொயீன் அலி வெறியாட்டம் ஆடினார். மறுபுறம் சாம் பில்லிங்க்ஸ் (26 ஓட்டங்கள்), கிரிகோரி (12 ஓட்டங்கள்), ஜோர்டான் (ஓர் ஓட்டம்) வரிசையாக வெளியேறினர்.

**பரபரப்புக்கு பஞ்சமில்லை**

கடைசி 3 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இருந்தது. அப்போது பாகிஸ்தான் அணி 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஓர் இலக்கையும், 19 ஆவது ஓவரில் மொயீன் அலி உட்பட 2 இலக்குகளையும் வீழ்த்தி ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

**கடைசி பந்துப் பரிமாற்றம்**

மொயீன் அலி 33 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவர் சென்ற பின் கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் 17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை. அப்போது களத்தில் டாம் கர்ரன், அதில் ரஷித் இருந்தனர். இருவரும் 4 பந்துகளில் 5 ஓட்டங்கள் எடுத்தனர். கடைசி 2 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் பெற்றால் இங்கிலாந்து வெற்றி பெறலாம் என்ற நிலையில், டாம் கர்ரன் 5ஆவது பந்தில் ஆறு ஓட்டம் அடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். ஆனால் கடைசிப் பந்தை அவரால் தொட முடியவில்லை.

பாகிஸ்தான் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்த ஆட்டத்தை வென்று ரி20 தொடரை 1 :1 எனச் சமன் செய்தது. பாகிஸ்தான் அணியில் ஷதாப் கான் 4 ஓவரில் 48 ஓட்டங்கள் கொடுத்து ஏமாற்றினாலும், வஹாப் ரியாஸ், ஷஹீன் ஷா அப்ரிடி தலா இரு இலக்குகளையும், இமாத் வாசிம், ஹாரிஸ் ராப் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தி வெற்றிக்கு வழிகோலினர்.

அதிரடியாக ஆடி 86 ஓட்டங்கள் குவித்த ஹபீஸ் ஆட்டநாயகன் விருதை வென்றார். (எ)

# பாதுகாப்பு முக்கியம்

டுபாய், செப்.2

நாம் இங்கு கொண்டாட்டத்துக்கு வரவில்லை. அனைத்து வீரர்களும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும் என்று ஆர்.சி.பி. அணியின் தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடர் யு.ஏ.ஈயில் நடைபெறவுள்ளது. அதற்கான கிரிக்கெட் வீரர்கள் அங்கு சென்றுள்ளனர். தற்போது கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலை முடித்துப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே கோலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேவையற்ற நடமாட்டத்தைத் தவிர்த்து சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் மத்தியிலும் ஐ.பி.எல். தொடர் நடத்தப்படுவது மகிழ்ச்சி தருகின்றது.




5 மாதங்களுக்குப் பின்னர் பயிற்சியில் ஈடுபட்டபோது சற்றுப் பதற்றமாக இருந்தது. கிரிக்கெட் ஆட்டங்களைத் தவிர்ப்பதற்கு நான் முயலவில்லை. ஆனால் பாதுகாப்பு நடைமுறைகளிலும் அதிக கவனம் செலுத்துகின்றேன். அதேவேளை, ரசிகர்கள் இல்லாது நடைபெறும் இந்தத் தொடர் வித்தியாசமானது. கிரிக்கெட் வீரர்கள் அதற்குத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (எ)

# தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.2

யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி சம்பியனானது.

தொடரின் இறுதியாட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் இறுதியாட்டத்தில் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 25:9, 25:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது. (எ-422)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 02.09.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.